செய்தி வெளியீடு எண்: 130 நாள்: 14.02.2020

பொதுத் (தேர்தல்கள்–2) துறை

## செய்தி வெளியீடு

வாக்காளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண், தற்பொழுது பயன்பாட்டிலுள்ள பத்து இலக்கம் கொண்ட வாக்காளர் அடையாள அட்டை எண் வடிவத்தில் இல்லாதிருப்பின் (16 இலக்கம் கொண்டதாக இருந்தால்) அவர்களுக்கு புதிய பத்து இலக்கம் கொண்ட PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கவேண்டும் என்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. இந்தப் புதிய PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் புதிய வாக்காளர் பதிவு எண் மற்றும் பழைய வாக்காளர் பதிவு எண் ஆகிய இரணடு எண்களும் இடம் பெற்றிருக்கும் (16 இலக்கம் கொண்ட பழைய எண் அட்டையின் பின்புறம் அச்சிடப்பட்டிருக்கும்).

2. அதற்கான முன் நிபந்தனைகள் (Pre-requisites ) மற்றும் நடைமுறைகளை (SOP) இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் அளித்துள்ளது.

3. மேற்கண்ட வழிகாட்டுதல்களின்படி, 16 இலக்கம் கொண்ட பழைய வாக்காளர் பதிவு எண்களை 10 இலக்கம் கொண்ட புதிய வாக்காளர் பதிவு எண்களாக மாற்றும் பணி நிறைவடைந்துள்ளது. இந்த புதிய PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் சம்மந்தப்பட்ட வாக்காளர்களுக்கு விநியோகிக்க தயாராகவுள்ளது. எனவே, வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) புதிய PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினை உரிய வாக்காளர்களுக்கு இலவசமாக அவர்களது இருப்பிடங்களுக்கே சென்று விநியோகிப்பார்கள்.

4. புதிய PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினை விநியோகம் செய்யும்பொழுது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) ஒப்புகையினை உரிய படிவத்தில் வாக்காளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வர். புதிய PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை விநியோகம் தொடர்பான தகவல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. இது தொடர்பான மேலும் விவரங்கள் தேவைப்படின், வாக்காளர்கள் தங்களது வாக்காளர் பதிவு அலுவலர்/உதவி வாக்காளர் பதிவு அலவலர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவு அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1950–ஐ தொடர்பு கொள்ளலாம்.

தலைமை தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மை செயலாளருக்காக.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9